பாம்புகள்

மா. ஏகாம்பரநாதன்
காரைக்குடி, டாக்டர் அழகப்பா கல்லூரி பேராசிரியர்
இயற்றியது

வெளியிட்டவர்
மா. சுவாமிநாதன்

முதற் பதிப்பு ஜூன் 1952

புத்தகம் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மா. சுவாமிநாதன்
4, பெஸன்ட் ரோட், கோபாலபுரம், சென்னை 6.

விலை ரூ. 1

அச்சிட்டோர்:
ஆம்ரா பிரஸ் லிமிடெட்,
ட்ஸ் ரோட், கோபாலபுரம், சென்னை-6.

முன்னுரை

பொதுமக்களின் உபயோகத்திற்காக விஞ்ஞான விஷயங்களைப்பற்றிய,—அவற்றிலும் சிறப்பாக உயிர்நூல்களைப் பற்றினவைகளை—, எளிய நூல்களைத் தமிழில் எழுதி வெளியிட வேண்டுமென்று நெடுநாட்களாக அவாவுற்றிருந்தேன். அவ்வரிசையில் முதல் பிரசுரமாக இதனை வெளியிட இப்பொழுது முன்வந்திருக்கிறேன். கலாசாலைகளிலும் பள்ளிக்கூடங்களிலும் உள்ள காட்சிசாலைகளைப் பார்வையிடும் பொதுமக்கள் சாதாரணமாகப் பாம்புகளைப் பற்றிய பகுதிகளைக்காண ஆவலுறுவதை நான் கண்டிருக்கிறேனாகையால், அவற்றைப் பற்றியே முதன்முதலாக எழுதலாமென்று துணிந்தேன். காலஞ்சென்ற ஸ்ரீ. மாதவையா அவர்கள் பிரசுரித்து வந்த தமிழர் நேசன் என்ற பத்திரிகையில் 'விஷப்பாம்புகள்' என்னும் தலைப்பில் பல ஆண்டுகளுக்கு முன்னே கட்டுரையொன்றை எழுதியிருந்தேன். இந்தப் புத்தகத்தில் அக்கட்டுரையை விரித்தும், சாதாரணமாகக் காணப்படும் சில விஷமில்லாப் பாம்புகளைப் பற்றிய செய்திகளைச் சேர்த்தும் எழுதியுள்ளேன்.

பாம்புகளிலுள்ள பல வகைகளுக்கும் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு விதமான பெயர்கள் வழங்கி வருகின்றன. அவற்றிற்கெல்லாம் பொதுப்பெயரைக் கொள்வதில் சிரமம் உண்டாகிறது. முடிந்தவரையில் பெரும்பான்மையான இடங்களில் வழங்கும் பெயர்களையே நான் கொடுக்க முயன்றிருக்கிறேன்; அவைகளை யொட்டி ஆங்கிலப் பெயர்களையும் அமைத்திருக்கிறேன்.

இப்புத்தகத்தில் பல படங்களை நான் அமைத்திருக்கிறேன்; அவற்றிற் சில நானே தயாரித்தவை; பல வெவ்வேறிடங்களிலிருந்து பெற்றவை. பம்பாய் நாச்சுரல் ஹிஸ்டரி ஸொஸைட்டி [illegible]ர்னல், இந்திய சர்க்கார், சென்னை ம்யூஸியம் சூ[illegible]ண்டெ[illegible]டெண்ட், மெஸ்ஸர்ஸ் J. & A. சர்ச்சில் லிமிடெ[illegible] [illegible] தங்கள் படங்களை நான் உபயோகித்துக்கொள்ள அன்புடன

உதவியளித்தார்கள்; மெஸ்ஸர்ஸ் ஓரியன்ட் லாங்க்மன்ஸ் கம்பெனி லிமிடெட் மிஸ்டர் பிட்ஸிமன்ஸ் என்பவர் எழுதிய 'தென் ஆப்பிரிக்கப் பாம்புகள்' என்ற நூலிலிருந்து 4, 5, 34 என்று எண்களிட்ட படங்களை நான் எடுத்துக்கொள்வதற்கு அன்புடன் அநுமதியளித்தார்கள். ரெவ. பாதர். ஸி. லீ. அவர்கள் பாம்புகளுடன் தாம் நிற்கும் புகைப்படத்தை நான் உபயோகிக்க அன்புடன் சம்மதம் அளித்தார்கள். இவர்கள் அனைவர்க்கும் என் நன்றி உரித்தாகுக.

காரைக்குடி, டாக்டர் அழகப்பா கல்லூரித் தமிழ் விரிவுரையாளரான திரு. V. SP. மாணிக்கம் எம். ஏ., எம். ஓ. எல். அவர்கள் மிகுந்த அன்புடன் இந்நூலின் வசனநடையைப் பார்த்துச் சிர்திருத்தி யுதவினார்கள். அவர்களின் அன்புடைமைக்கும் நான் நன்றி செலுத்துகிறேன். ஆம்ரா அச்சகத்தார் இப்புத்தகத்தை அழகுபெற அச்சிட்டுக் கொடுத்தமைக்கும் என் கடமைப்பாட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்புத்தகம் இன்னும் சிர்பெறுவதற்கு அன்பர்கள் அளிக்கும் எல்லாவித ஆக்கமுறை ஆலோசனைகளையும் நான் நன்றியுடன் ஏற்றுக்கொள்வேன்.

சென்னை,
ஜூன், 1952.

மா. ஏ.

PREFACE

It has long been my desire to bring out small books in Tamil dealing with popular science, especially biological topics for laymen. I have ventured to write this as the first of the series. I have selected snakes as the first topic, as generally laymen who visit college and school museums show a keen interest in these animals. Several years back, I wrote an article in the '*Tamilian's Friend*' edited by the late **Sri A. Madhaviah,** on 'Poisonous Snakes'. This book is an expansion of the article with the inclusion of some of the common non-poisonous snakes.

Difficulty has been experienced in finding out the names in Tamil for the different species of snakes, as there is no uniformity in this. I have given the Tamil names by which they are commonly known in most of the localities and also their equivalents in English.

I have given plenty of illustrations; some are original, others have been taken from several sources. My thanks are due to the Secretary, Bombay Natural History Society Journal, the Government of India, the Superintendent of the Madras Government Museum, and Messrs. J. A. Churchill Ltd., for permitting me to make use of their illustrations; to Messrs. Orient Longmans Ltd., for permission to reproduce illustrations No. 3, 4 & 34 from 'the Snakes of South Africa' by Fitzsimons. I should like to express my gratitude also to the Rev. Father C. Leigh, S. J., for his ready consent to my request to print his photo with the snakes on.

I am indebted to Sri V. SP. Manickam, M.A., M.O.L., Lecturer in Tamil of Dr. Alagappa Chettiar College, Karaikudi, for his kindness in scrutinizing the manuscripts

from the point of view of the Tamil style. I am thankful to the staff of the Amra Press Ltd., for the care they have taken in getting this up.

I shall feel thankful for helpful and constructive suggestions for improvement.

MADRAS,
June, 1952.

M. E.

பொருளடக்கம்

படங்களின் அட்டவணை



ரெவ. பாதர் ஸி. லீ. S. J.
(4 மலைப் பாம்புகளுடன்)
(படம் பிடித்தவர் : திரு Y. பொன்னையா, தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி).

பாம்புகள்

1. உறுப்பு அமைப்பும் வாழ்க்கையும்


விஷமுள்ள பாம்புகளும் விஷமற்ற பாம்புகளும்

'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்று ஒரு பழமொழி உண்டு. இந்த நடுக்கத்துக்குக் காரணம் பாம்பின் விஷத்தன்மையே யாகும். பாம்புகளில் பல இனங்கள் உண்டு. எல்லா இனப் பாம்புகளின் வாய்நீரி லும் சிறிதளவு விஷம் உண்டு; ஆனால் அவ்விஷத்தில் மக்களுக்கு ஆபத்து உண்டாக்கும் சக்தி இல்லை. இரை யாகும் பிராணிகளைக் கொல்லவோ, அல்லது அவற்றை அசைய முடியாமல் செய்யவோ போதிய சக்தி தான் அவ் விஷத்தில் அடங்கி யிருக்கிறது. சில பாம்புகளுக்குத் தான் விஷம் சுரக்கவும், அவ்விஷத்தை மற்றப் பிராணி களுக்குள் செலுத்தவும் கூடிய நச்சுக்கருவிகள் உண்டு; இப்பாம்புகளே நமக்கு ஆபத்து விளைக்கும்; இப்படி மனிதர்களுக்குக் கெடுதல் விளைக்கும் நச்சுக்கருவிகளை யுடைய பாம்புகளையே நாம் விஷப்பாம்புகள் என்று கூறுகிறோம். வைபர் (Viper), நாகப்பாம்பு அல்லது நல்லபாம்பு (Cobra), கட்டுவிரியன் (Krait) என்ற சில நிலப் பாம்புகளுக்கும், எல்லாக் கடற்பாம்புகளுக்கும் நச்சுக்கருவிகள் உண்டு. நிலத்தில் வாழும் பிற பாம்பு களுக்கும், குளம் ஏரி முதலான நீர்நிலைப் பாம்புகளுக்கும் நச்சுக்கருவிகள் இல்லை; இவை நமக்குத் தீமை பயக்கக் கூடியனவல்ல; ஆகவே இவற்றை நாம் விஷமற்றன வாகக் கருதுகிறோம்.

பாம்பின் புறவமைப்பு

பாம்பின் தேகத்தில் தலை, உடல், வால் என்ற மூன்று பாகங்கள் இருக்கின்றன. வால் என்பது குதம்

அல்லது மலத்துவாரத்திற்குப் பின்புறமுள்ள பாகமாகும். உடலிலும் வாலிலும் செதில்கள் உண்டு. மேல் பாகத்தில், செதில்கள் நாட்டோடுகள் அடுக்கப்பட்டாற் போல் அமைந்திருக்கும். அடிப்பாகத்துச் செதில்கள் (வயிற்றுச் செதில்கள்) பெரும்பாலும் அகலமானவை ; சில பாம்புகளில் அவை குறுகலாகவும், மற்றும் சிலவற்றுள் அவை மேல் பாகத்திலுள்ள மாதிரியாகவும் இருப்ப




1 2 3

படம் 1. பாம்பின் வயிற்றுச் செதில்களின் அமைப்பு
1. அகலமானவை ; 2. குறுகலானவை ;
3. மேல்பாகத்துள்ளன போன்றவை.

துண்டு. தலையிலுள்ள செதில்கள் அடுத்தடுத்துச் சேர்ந்திருக்கும் ; இவைகளுக்கு ஷீல்டுகள் (shields) என்று பெயர். செதில்களும் ஷீல்டுகளும் சாரைப்பாம்பில் (Rat-snake) எவ்வாறு அமைந்திருக்கின்றன வென்பதைப் படத்தில் காண்க. அவற்றின் அமைப்பு இனத்திற்கு இனம் வேறுபட்டுக் காணும். இவ்வேறுபாடுகளைக்கொண்டு ஒரு பாம்பு எந்த இனத்தைச் சேர்ந்தது என்று நாம் குறிப்பிடலாம்.

பாம்பின் தலையில் இரண்டு நாசித்துவாரங்களும் இரண்டு கண்களும் இருக்கின்றன. செவித்துவாரமோ, செவிப்பறையோ (tympanum) பாம்பிற்கில்லை. பாம்பின் வாய் அகலமாகவும், நாக்கு இரண்டாகப் பிளவுபட்டும் இருக்கும். பாம்பின் நாவிற்கும் விஷத்துக்கும்

சம்பந்தமில்லை. நாக்கு பாம்பிற்கு ஓர் உணர்ச்சிக் கருவியாகும். வாய் மூடியிருக்கும் பொழுதே, நாவை




[B. N. H. S. Journal]

படம் 2. சாரைப்பாம்பின் செதில்கள் ஷீல்டுகள் அமைப்பு
1, 2, 3, தலையும், கழுத்துப் பாகமும்; (1. பக்கத் தோற்றம்;
2. மேல் தோற்றம்; 3. அடித்தோற்றம்)
4. உடலின் நடுப்பாகம் (பக்கத் தோற்றம்)
5. உடலின் பின்பாகமும் வாலும் (அடித்தோற்றம்)

நீட்டுவதற்கும், உள்ளிழுப்பதற்கும் பாம்பின் முன்வாயில் ஓர் இடைவழி உண்டு.

பாம்பின் பற்கள்

விஷமற்ற பாம்புகளுக்கு மேல்வாயின் ஒவ்வொரு பக்கத்திலும் வெளிப்புறமாக ஒரு வரிசைப் பற்களும்




3



4 [Fitzsimons]

படம் 3. விஷமற்ற பாம்பின் மேல்வாய்ப்பற்கள் வரிசை
படம் 4. விஷமற்ற பாம்பின் பற்களமைப்பு (பக்கத்தோற்றம்)

அவற்றிற்கு உட்புறமாக மற்ருெரு வரிசைப் பற்களும் காணப்படும். கீழ்வாயில் ஓரங்களில் மட்டுந்தான் பற்கள் இருக்கும். பற்களெல்லாம் பின்புற வளைவுடையன. அவை இரையைக் கடிக்கவோ, அரைக்கவோ உதவா.




[Fitzsimons]
படம் 5. விஷப்பாம்பின் (வைபரின்) பற்களமைப்பு

விஷப்பாம்புகளுக்கு மேல்வாயில் வெளிவரிசைப் பற்கள் இல்லை. ஆனல் உள் வரிசைப் பற்கள் மாத்திரம் உண்டு; மேல்வாயில் முன்பாகமாக இரண்டு அல்லது நான்கு நச்சுப் பற்கள் இருக்கும். அவற்றின் அமைப்பு ஒவ்வொரு விஷப்பாம்பின் இனத்தை விவரிக்குமிடத்தில் விளக்கப்படும்.

பாம்பு ஊரும் முறை

பாம்பிற்குக் கால்களில்லை. இல்லா விட்டாலும் பாம்புகள் தரையிலும், மரத்திலும், நீரிலும் வேகமாக ஊர்ந்தோ, நீந்தியோ செல்லும். கால்களில்லாமை பாம்புக்கு அநுகூலமாகும்; இடைஞ்சல் இல்லாமல் வளைகளிலும், பொந்துகளிலும், புதர்களிலும் பாம்புகள் செல்லக்கூடும்.

பாம்பிற்குக் கழுத்து முதல் வாலின் நுனிவரையில் விலாவெலும்புகள் உண்டு. அவை கீழே வயிற்றுச்



[Madras Museum]

படம் 6. பாம்பின் எலும்புக்கூடு

செதில்களுடன் இணைந்திருக்கின்றன. விலாவெலும்புகள் தங்கட்கு இடையேயுள்ள தசைகள் சுருங்கி நீளும் போது முன்னும் பின்னும் அசைவுபடும். இருபக்கத்து விலாவெலும்புகளும் மாறி மாறி அசைவுற்றால் வயிற்றுச்

செதில்களும் அசைவுறும். வயிற்றுச் செதில்கள் சொர சொரப்பான இடத்தைப் பற்றிக்கொள்ளப் பாம்புகள் விலாவெலும்புகளினல் ஊர்கின்றன. இக்காரணத்தால் கண்ணாடி போன்ற வழவழப்பான தரையில் பாம்பு ஊர முடியாது.

பாம்பின் உணவு

பாம்பிற்குத் தவளை, எலி போன்ற பிராணிகளும் சிறு பறவைகளும், பிற பாம்புகளும் உணவாகும். கடற் பாம்பு பெரும்பாலும் மீனைத் தின்னும். மெல்லிய தண்ணீர்ப்பாம்பு ஒரு பருத்த தவளையையும் விழுங்க வல்லது. கீழ்த்தாடையின் இருபக்கத்து எலும்புகளும் இரப்பர் போல் நீட்டவும் சுருக்கவும் கூடிய பந்தகத்தினல் (ligament) முன் பாகத்தில் இணைந்திருக்கின்றன; தவிர மேல்தாடை யெலும்புகளும் வாய் நன்ருக விரிந்து கொள்ளுமாறு ஒன்றோடொன்று தளர்ச்சியாகப் பூட்டப் பட்டிருக்கின்றன.

பற்கள் பின்புறமாக வளைந்திருக்கு மென்று முன்பு கூறப்பட்டது. அதனல் பாம்பு தன் இரையைக் கொக்கி போல் பற்றிக்கொண்டு, மெல்ல மெல்ல உள்ளுக்கிழுக்க அவை உதவுகின்றன. இரை பருமனக விருந்தாலும் பாம்பின் உடல் நன்ருக விரிந்து அதனை அடக்கிக் கொள்ளும். பாம்பிற்கு மார்பெலும்பு இல்லாமை அது தன் உடலை வேண்டியபடி விரித்துக்கொள்ள இடங்கொடுக்கிறது. இரையை விழுங்கும்போது பாம்பு பெரும் பாடு படும். இதனலேயே இரை விழுங்கியதும் வெகு நேரம் வரையில் அது ஒரே இடத்தில் மந்தமாகக் கிடக்கும். இதனை ஒட்டித்தான் ‘இரை தின்ற பாம்பு போல்’ என்கிற பழமொழியும் வழங்கிவருகிறது.

இரையை விழுங்குமுன் விஷப்பாம்பு தன் விஷத்தினல் அதனைக் கொல்லும், அல்லது அசைவறச் செய்யும். பாம்பு தன் விஷம்பட்ட இரையைத் தின்ருலும் அவ் விஷம் அதைக் கொல்லாது.

கண்ணும் செவியும்

பாம்பின் கண்களுக்கு இமைகள் இல்லை. ஆனால் அவை கேடு வராமல் காக்கப்படுவதற்குக் கண்ணாடி போன்ற செதில்கள் இருக்கின்றன.

பாம்புக்குச் செவியில்லை என்றும், கண்ணே செவியாகும் என்றும் கருதுவதுண்டு. அதனால் பாம்பைக் 'கட்செவி' என்றும் கூறுவர். பாம்பிற்குப் புறச்செவி, செவித்துவாரம், செவிப்பறை என்ற இவை இல்லை; ஆனால் உட்செவிகள் மட்டும் உண்டு. உட்செவிதான் ஒலியை வாங்கிக் கொள்வதற்கு முக்கியமான கருவியாகும். பாம்பிற்குச் செவிப்பறை இல்லாதபடியால் ஒலியலை காற்று வழியாகச் சென்று காதில் தாக்கமுடியாது. அதற்கு உட்செவி மட்டும் இருக்கிறபடியால் நிலத்தின் வழியாகவோ அல்லது வேறு ஏதேனுமொரு திடப்பொருள் மூலமாகவோ ஒலி சென்றால் தான் பாம்பு கேட்க முடியும். மேஜர் வால் என்பவர் இதுபற்றிச் செய்த பரிசோதனை இங்குக் கவனிக்கத் தகும். அவர் சில நாகப்பாம்புகளின் கண்களைப் பிளாஸ்திரியினால் மூடி அவற்றை ஒரு தாழ்வாரத்தில் விட்டு வைத்தார். அவர் பெரிய தகர டப்பிகளைக் குச்சியால் தட்டியும் குழல் ஊதியும் ஓசை உண்டாக்கினர்; ஆனால் அவ்வொலிகளைப் பாம்புகள் சிறிதேனும் கேட்டதாகத் தெரியவில்லை. ஆனால் அவர் தாழ்வாரத்தில் இருந்த ஒரு நாற்காலியை இழுத்தும், தடியினால் நிலத்தில் அடித்தும் ஓசையுண்டாக்கியபோது, அவை தம் தலைகளை நிமிர்த்திப் படங்களை விரித்து அபாயத்தை எதிர்க்கச் சித்தமாக இருந்தன வென்று கூறுகிறார்.

பாம்பாட்டியின் மகிடியின் இசையைக் கேட்டுப் பாம்பு படத்தை விரித்தாடுவதை நாம் பார்க்கிறோம்; ஆனால் அது இசையைக் கேட்டு ஆடவில்லை யென்றும், அவனுடைய கைகால்களின் அசைவுகளைக் கண்டே அது

ஆடுகிறதென்றும் சில நிபுணர்கள் கருதுகிறார்கள்; இது ஆராய்ச்சிக்குரிய ஒரு விஷயமாகும்.

பாம்பு சட்டை உரித்தல்

பிராணிகளிற் பல தேய்ந்து மாய்ந்து போன தம் மேல்தோலை அடிக்கடி உரித்து விடுவதுண்டு. பாம்பும் இரண்டொரு மாதங்களுக்கொரு தடவை தன் தோலை ஒரேயடியாக முழுமையும் உதிர்த்து விடுவதால் அதை நாம் ஒரு தனிக் காட்சியாகக் கொள்கிறோம். இதையே நாம் பாம்பு ‘சட்டை உரித்தல்’ என்கிறோம். பாம்பு தன் சட்டையை உரிப்பதற்கு முன் அதன் மேல் தோல் தளர்ந்து விடும். உரித்த சட்டை உட்புறம் வெளிப்பக்கமாகத் திருப்பினாற்போல் காணப்படும்; கண்களின் மேலுள்ள செதில்களையும் இப்படி உரித்த சட்டையில் காணலாம். சட்டை உரிக்குங் காலத்தில் பாம்பு மந்த நிலையில் இருக்கும்.

பாம்பின் இனப் பெருக்கம்

வைபர், கடற்பாம்பு, பச்சோலைப்பாம்பு என்ற இனங்க குட்டி ஈனும். பிற பாம்பினங்கள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். பாம்பு தான் இட்ட முட்டைகளைச் சுற்றிக்கொண்டு அவற்றிற்குக் கேடு வராமல் காக்கும். பாம்பின் முட்டைகள் இயற்கை வெப்பத்தால் பொரிவதன்றி அடைகாத்துப் பொரிவதில்லை. ஏனென்றால், பறவைகளுக்கு உள்ளது போல் பாம்பின் உடலுக்கு வெப்ப நிலை ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சூழ்நிலையை ஒட்டி அது மாறி மாறி வரும். பாம்புகள் தாமிடும் முட்டைகளைத் தின்று விடும் என்பதும், கண்ணாடி விரியனுக்கு முதுகு வெடித்துக் குட்டிகள் வெளியே வரும் என்பதும் தவறான எண்ணங்களாகும். சில இன விரியன் பாம்புகள் இராஜாத்தேள் என்று கூறும் மிக்க விஷமுள்ள தேள்களை ஈனும் என்று சிலர் கருதுவர். இதுவும் உண்மையன்று. பாம்பு பாம்பைத்தான் ஈனும்.


பாம்பின் பகைகள்

கீரிப்பிள்ளை, பன்றி, முள்ளெலி, முள்ளம் பன்றி செந்நாய், நாரை, கருடன் முதலியவை பாம்பு களைக் கொன்று தின்கின்றன. இவை தம் வேகத் தினாலும், சாதுரியத்தினாலும் ஸர்ப்பத்தைச் சரேரென்று தாக்கி, அதன் விஷத்திற்குத் தாம் ஆளாகாமல் அதனைக் கொல்லுகின்றன. கீரிப்பிள்ளைக்குப் பாம்பின் விஷம் பாதிக்காதென்பதில் உண்மை யிருப்பதாகத் தெரிய வில்லை. பூனையும் ஸர்ப்பத்துடன் சண்டை போட்டு அதனைக் கொன்றிருப்பதைப் பலர் கண்டிருக்கிறார்கள்.

2. விஷப்பாம்புகள்

பாம்பின் நச்சுக்கருவிகள்

விஷப்பாம்பின் மேல்தாடையில் இருபக்கங்களிலும் இரண்டு நச்சுச் சுரப்பிகளும். முன்வாயில் நச்சுப்பற்



படம் 7. பாம்பின் நச்சுக்கருவிகள் [Original photo]
1. நச்சுச்சுரப்பி ; 2. நச்சு நாளம் ; 3. நச்சுப்பல்.

களும் உண்டு. நச்சுச் சுரப்பிகள் இரு குழல்கள் (நச்சு நாளங்கள்) வழியாக நச்சுப்பற்களின் அடிப்பாகத்துடன் இணைந்திருக்கின்றன. நச்சுப்பற்களுக்குக் கெடுதல் வராமல் அவைகளைச் சுற்றி உறையிட்டாற்போல் சதை மூடியிருக்கும். வைபர் போன்ற பாம்புகளில் நச்சுப்பல் குழல்போல் இருக்கும்; அக் குழல்வாய் பல்லின் நுனியில் திறக்கும். நாகப்பாம்பு, கட்டுவிரியன் போன்ற பாம்பு களின் நச்சுப்பல்லில் பொளிவாய் (நீண்டகுழிவு) இருக்கும். நச்சுச்சுரப்பிகளில் விஷம் சுரக்கும். சுரப்பிகளை மூடியிருக்கும் சில தசைகள் சுருங்கும்போது சுரப்பிகள் அழுத்தப்பட்டு, உள்ளிருக்கும் விஷம் நாளங்கள் வழியாக நச்சுப்பல்லின் நுனிக்குச் செல்லும். பாம்பு ஒருவனைக் கடிக்கும்போது நச்சுப்பற்கள் வழியாக விஷம் அவனுடலில் சென்று இரத்தத்துடன் சேர்கிறது.

நம் நாட்டில் உள்ள விஷப்பாம்புகள் மிகச் சிலவே. அவற்றை இங்கு விரித்துக் கூறுவோம்.




படம் 8. கடற்பாம்பு [Fayrer]

கடற்பாம்புகள் (Sea-snakes). இவற்றுள் பல இனங்கள் உண்டு. அவற்றிற்கெல்லாம் வால் துடுப்புப்போல் இருக்கும். (மற்றப் பாம்புகளுக்கு வால் உருண்டிருக்கும்).

அவற்றின் தலையும் கண்களும் மிகச் சிறியவை. தண்ணீரில் நீந்தும்போது காற்றைச் சுவாசிக்குமாறு நாசித் துவாரங்கள் தலையில் மேற்புறமாக இருக்கும். சாதாரணமாகக் கடற்பாம்பு மூன்று அல்லது நாலு அடி நீளம் வளரும். அதன் உடலின் மேற்பாகத்தில் நீலம் அல்லது பசுமை நிறத்தோடு கருமையான வரிகளும் காணப்படும்; அடிப்பாகம் மஞ்சள் அல்லது வெண்ணிறத்தது. கடற்பாம்பு குட்டி ஈனும்.

நாகப்பாம்பு (Cobra). இதை நல்ல பாம்பு அல்லது ஸர்ப்பம் என்றும் சொல்லுவதுண்டு. நாகப்பாம்பை அதன் படத்தினுல் அறியலாம். கழுத்திலுள்ள விலா வெலும்புகள் நீண்டும், அவை சாதாரண நிலையில் பின்




[Fayrer]

படம் 9. நாகப்பாம்பு ; வலது பக்கத்துப் படத்தில்
அடிப்பாகத்துக் கறுப்புச் செதில்களைக் காண்க


புறமாக படங்கியும் இருக்கும். பாம்புகள் தம் தசைகளின் இயக்கத்தினுல் அவற்றை இருபக்கங்களில் விசிறிபோல் விரிக்கின்றன. இப்பாகம் தான் பாம்பின் படம் எனப்

படும். பகை அருகே வரும்போது நாகப்பாம்பு தன் தலையை நிமிர்த்திப் படத்தை விரிக்கும்.

பாம்பின்படத்தில் மூக்குக் கண்ணாடி போன்ற ஒரு குறியைக்காணலாம். சில பாம்புப் படங்களில் வட்டவடிவமான ஒரு குறியும் உண்டு. குறியொன்றும் இல்லாத படங்களும் இருக்கின்றன. படம் விரிந்து இருக்கும்போது தான் மேற்கூறிய குறிகள் நன்கு தெரியும். படம் சுருங்கியுள்ளபோது அவை புலப்படா. ஆனால் எல்லா நாகப் பாம்புகளுக்கும் கழுத்தின் அடிப் பாகத்தில் கறுப்புப் புள்ளிகளோடு கூடிய இரண்டொரு செதில்கள் இருக்கும். சில விஷமற்ற பாம்புகளுக்கும் கழுத்துப் பாகத்தைப் படம்போல் சிறிதளவு விரிக்



படம் 10. நாகப்பாம்பின் படம்: கழுத்திலுள்ள விலாவெலும்புகள் நீளமாக இருப்பதைக் காண்க.




[B. N. H. S. Journal]

படம் 11. நாகப்பாம்பின் படமும் அதில் காணப்படும் குறிகளும்

கும் இயல்பு உண்டு. ஆனல் அவற்றிற்கு இரு கறுப்புப் புள்ளிகளுடன் கூடிய செதில்கள் இல்லை.

நாகப்பாம்பு சாதாரணமாகச் சுமார் ஐந்து அடி நீளம் வளரும். அது கரு நிறமாகவோ தவிட்டு நிறமாகவோ இருக்கும். வெட்டவெளிகளும், காடுகளும், புதர்களும், மரப்பொந்துகளும், பழைய கட்டடங்களும், புற்றுக்களும் நாகப்பாம்புகள் பெரும்பாலும் வாழுமிடமாகும். சில வேளைகளில் எலி, தவளை, கோழி போன்ற




படம் 12. நாகப்பாம்புகள் [B. N. H. S. Journal]

பிராணிகளைப் பின்தொடர்ந்து நம் வீடுகளுக்குள்ளும் அவை வருவதுண்டு. மரங்களின்மீது பறவையைத் தின்பதற்கு நாகப்பாம்பு ஏறும். மற்றைப் பாம்புகள்போல் இப்பாம்பும் தண்ணீர் குடிக்கும்; நீரில் சுலபமாக நீந்தும். அது மக்களை வலுவில் எதிர்த்து நின்று சண்டை செய்யுமென்பதும் தீங்கிழைத்தவனை நினைவில் வைத்துக் கொண்டிருந்து பழிவாங்கும் என்பதும் விஞ்ஞானிகளால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. அது மக்களைக் கடிப்பது தற்காப்பின் பொருட்டேயாகும்.

நாகப்பாம்பிற்கு மேல்வாயில் முன்பாகமாக பக்கந் தோறும் நீண்ட நச்சுப்பல் ஒன்றும், அப் பல்லின்பின் சாதாரணத் திடப்பற்கள் (solid teeth) இரண்டு அல்லது மூன்றும் இருக்கும். நச்சுப்பல்லில் பொளிவாய் இருக்கும். நச்சுப்பற்களைச் சதை மூடிக்கொண்டிருக்கும். அப்பற்களுக்குக் கேடுவந்து விழுந்துவிட்டால் புதிய நச்சுப் பற்கள் அங்குத் தோன்றும். பாம்பாட்டி நாகப்பாம்பின் பல்லைப் பிடுங்கியபின் தான் அதனை ஆட்டுவதற்குக் கொண்டுவருவான். அப்பாம்புகளுக்குப் புதிய நச்சுப் பல் முளைக்குங்கால் பாம்பாட்டி அதனால் கடியுண்டு இறப்பதுமுண்டு.

நாகப்பாம்பு சாரைப்பாம்புடன் புணரும் என்பது தப்பெண்ணம். நாகப்பாம்பினத்திலேயே ஆண், பெண்



[Fayrer]

படம் 13. நாகராஜா

என்ற பகுப்புண்டு. ஒரு தடவையில் நாகப்பாம்பு பன்னிரண்டு முதல் இருபத்தைந்து வரை முட்டைகளிடும். முட்டைகளை அது தன் உடலால் சுற்றிப் பாதுகாக்கும். முட்டையிலிருந்து குஞ்சு வளர்ந்து வெளியே வர இரண்டு மாதங்களாகும். வெளிவரும் பொழுதே அதற்கு விஷமுண்டு. குஞ்சுகள் மிகச் சுறுசுறுப்பாக இருக்கும்.

நாகராஜா (King cobra). இது மரங்களடர்ந்த மலைப் பகுதிகளில் வாழும்; சுமார் பதினைந்து, பதினெட்டு அடி நீளம் வளரும். இதன் படத்தில் குறி ஒன்றும் இராது. இது கரிய நிறமுடையது; அக்கருமைக்கு இடையே வெண்ணிறமான குறுக்கு வரிகள் இருக்கும். இப்




படம் 14. நாகப்பாம்பின் முட்டை [Original Photo]

பாம்பிற்கு இரை பிற இனப்பாம்புகளே யாகும். இது இருபது முதல் முப்பது வரை முட்டைகளிடும். தாய்ப் பாம்பு அவற்றைப் பாதுகாக்கும். ஆண் பாம்பும் அச் சமயத்தில் தாயுடன்கூட இருப்பதைச் சிலர் கண்டுளர். நாகராஜாவின் தலையில் மாணிக்கம் இருக்கும் என்பது உண்மையன்று.


கட்டுவிரியன் அல்லது எட்டடி விரியன் (Krait). இது சாதாரணமாக இரவில் சஞ்சரிக்கும். சுமார் நாலு அல்லது ஐந்து அடி நீளம் வளரும்; தேகம்

கறுப்பு நிறமுடையது ; அதன் இடையிடையே வெண்ணிறமான குறுக்கு வரிகள் இருக்கும். முதுகின் நடுவிலுள்ள செதில்கள் பெரியனவாகவும் அறுகோண வடிவினவாகவும் இருக்கும் ; கட்டுவிரியன்



[Fayrer]


படம் 15. கட்டுவிரியன் ; வடஇந்தியாவில் காணப்படும் ஓரினம் : உடலில் மஞ்சள் நிறமான கட்டுகள் இருக்கும்.



[Fayrer]


படம் 16. கட்டுவிரியன் ; தென்னிந்தியாவில் காணப்படும் இனம் : வெண்ணிறமான கட்டுகள் இருக்கும்.

என்று தெரிந்து கொள்வதற்கு இவ்வகைச் செதில்கள் தக்க அறிகுறியாகும். கட்டுவிரியன் ஆறு முதல் பத்துவரை முட்டைகளிடும். ஆணும் பெண்ணும் ஒரேயிடத்தில் வாழ்வதாகக் கண்டுளர் ; ஆகையால் ஒரு கட்டுவிரியனைக் கண்டு கொன்றால் அங்கு அதன் ஜோடி இருக்கிறதா என்று தேடிக் காண்பது நல்லது.




படம் 17. கட்டுவிரியனுடைய முதுகு செதில்கள்

வைபர்கள் (Vipers). இவைகளின் தலை முக்கோண வடிவமாகும். அதன் மேல் ஷீல்டுகள் இரா ; செதில்களே இருக்கும். இவற்றின் நச்சுப்பற்கள் குழல்போன்றன. வைபர்கள் முட்டையிடுவனவல்ல ; குட்டிபோடும். வைபர்களுள் குழி வைபர் (Pit viper), குழியற்ற வைபர் (Pitless viper) என்று இரு பிரிவுகள் உண்டு.



[Fayrer]


படம் 18. குழிவைபர்



படம் 19. குழிவைபர் தலை
1. குழிவு.

குழிவைபர். இதன் கண்களுக்கும் நாசித்துவாரங்களுக்கும் இடையில் இரு குழிவுகள் உண்டு. இது மலைப் பகுதிகளில் தான் வாழும் ; இரண்டு, இரண்டரை அடி நீளம் வளரும்.


குழியற்றவைபர். இவற்றிற்கு மேற்கூறிய குழிவுகள் இல்லை. கண்ணாடி விரியனும் (Russell's viper) சுருட்டை விரியனும் (Saw-scaled viper) இவ்வகுப்பைச் சேர்ந்தன.



[to night Fayrer]


படம் 20. கண்ணாடி விரியன்

கண்ணாடி விரியன். இதனைக் கத்தரி விரியன் என்றும் கூறுவர். எல்லா வைபரையும் போலவே இது முக்கோணத் தலையும், தலையின் மேல் செதில்களும், அகன்ற வயிற்றுச் செதில்களும் உடையது. சாதாரணமாக நாலடி நீளம் வரையில் இது வளரும். பருத்த உடலும் குட்டை வாலும் உடையது; தவிட்டு நிறமுள்ளது. இதன் உடலின்மேல் பல வட்டமான குறிகள் சங்கிலிபோல் தொடர்ந்து காணப்படும். இது மந்தமான பாம்பு; இரு பக்கங்களிலும் இரண்டு



படம் 21. கண்ணாடி விரியன் தலை

நீண்ட நச்சுப்பற்களும் அவற்றின் பின் மூன்று அல்லது நான்கு சிறு பற்களும் இதற்கு உண்டு. இதன் சீறலை ஒருமுறை கேட்டவர் அதனை என்றும் மறக்க மாட்டார். ஒரு தடவையில் இருபது முதல் முப்பது வரை இது குட்டிகள் ஈனும்.




படம் 22. சுருட்டை விரியன் [Fayrer]

சுருட்டை விரியன் அல்லது ஊதுசுருட்டை. இது வறண்ட மணற்பாங்கிலும் புற்றரையிலும் சாதாரணமாக வாழும்; ஒன்றரை அல்லது இரண்டு அடி நீளம் வளரும்; மங்கிய பழுப்பு நிறமாக இருக்கும். இதன் அருகே சென்றாலும், இதனைத் தீண்டினாலும் உடனே இது சுருண்டு தன் செதில்களை உராய்த்து ஒருவிதமான சலசலப்பை எழுப்பும். இக்காரணத்தால் இதனை ஊதுசுருட்டை என்கின்றனர். மற்ற வைபர்கள்போல் இதுவும் குட்டி ஈனுவதே.

3. விஷமற்ற பாம்புகள்

முன் அதிகாரத்தில் விளக்கப்பட்ட பாம்புகள் தவிர மற்றவைகளெல்லாம் மக்கள் உயிருக்கு தீங்கு விளைக்கக் கூடியனவல்ல; ஆதலால் அவைகளை விஷமற்றனவாகக் கருதலாம். அவற்றுள் சாதாரணமாகக் காணப்படும் சில பாம்புகளை மட்டும் இங்குக் கூறுவோம்.

குருடிப்பாம்பு அல்லது செவிப்பாம்பு(Blind snake). தோற்றத்தில் இந்தப் பாம்பு மண்புழுவைப் போல் இருக்கும். இது நிலத்தில் வளையில் வாழும். நம் வீடுகளிலும் இதனைச் சில சமயங்களில் காணலாம். இதன் தேகம் மிக மென்மையாகவும், செதில்கள் சிறுத்துப் பளபளப்பாகவும் இருக்கும்.



23. குருடிப்பாம்பு

உடலின் அடிப்பாகத்திலும் மேற்புறத்திலுள்ள மாதிரி செதில்கள் இருக்கும். இதன் கண்கள் மிகச் சிறியன; அவை செதில்களால் மூடப்பட்டுள்ளன. வாயில் பற்கள் மிகக் குறைவு. இப்பாம்பு எறும்பு, கறையான் வண்டு போன்ற சிறு பிராணிகளை இரையாக உட்கொள்ளும். சிறிது ஈரம் பாய்ந்து பட்டுப்போன மரங்களின்கீழ் பூச்சிகள் இருக்குமாதலால், இப்பாம்பை அங்குக் காணலாம். இது மக்களுடைய காதினைத் தேடிப் புகும் என்பது பொது மக்களின் நம்பிக்கை; இக்காரணமாக இதனைச் செவிப்பாம்பு என்றும் கூறுவர். இது நக்கினால் விஷமென்றும், அதனால் சிற்சில தோல் வியாதிகள் உண்டாகின்றன வென்றும் கூறுவதில் உண்மை யில்லை. குருடிப் பாம்பில் பல சிற்றினங்கள் உண்டு. சாதாரணமாக இப்பாம்புகளெல்லாம் ஐந்து அல்லது ஆறு அங்குல நீளம் வளரும். இவையெல்லாம் முட்டையிடும். ஒருதடவையில் இரண்டு முதல் ஏழு முட்டைகள் வரை இது இடுவதைக் கண்டுள்ளார்கள்.

கூழைப்பாம்பு அல்லது மண்ணுண்ணிப்பாம்பு (Earth snake). இதனை மணற்பொந்துகளில் காணலாம். வால் குட்டையாகவும், மழுங்கலாகவும் இருக்கும்; வயிற்றுச்



[Photo Original]


படம் 24. கூழைப்பாம்பு

செதில்கள் குறுகலாகவிருக்கும். தேகத்தின் இருமுனை களும் ஒன்றுபோலிருப்பதால் இதனை இருதலைப்பாம்பு என்றும் சொல்வதுண்டு. புழுக்களையும், பூச்சிகளையும் இரை யாக உட்கொள்ளும். இப்பாம்பு கடித்தால் குட்டம் போன்ற தோல் வியாதிகள் உண்டாகும் என்று கூறுவ தில் உண்மையில்லை. கூழைப்பாம்பில் இரண்டு மூன்று இனங்கள் உண்டு. அவைகளெல்லாம் முட்டையிடுவன.

[மண்புழுவை மண்பாம்பு என்று தவறுக கூறுவ துண்டு. இது மண்ணைத் தின்பதால் மண்ணுண்ணி என்ற பெயரையும் பெற்றுள்ளது. பாம்புகளுக்கெல்லாம் எலும் புகள் உண்டு; மண்புழுவுக்கு எலும்பு இல்லை. அதனுல் அது பாம்பாகாது.]

மலைப்பாம்பு (Python). பாம்பினங்களில் இது மிகப் பெரியதாகும். மலைப்பிரதேசங்களில் சாதாரணமாக இது வாழும். இதன் வால் குட்டையானது. ஏறக்குறைய பத்து முதல் பதினைந்து அடி வரை நீளம் இப்பாம்பு சாதாரண மாக வளரும். மலேயா தேசத்தில் 30, 33 அடி நீளமுள்ள மலைப்பாம்புகளும் உண்டு. பாம்புகளுக்குக் கால்கள் இல்லை என்று முன்பு கூறப்பட்டது. ஆனுல் மலைப்பாம் புக்குப் பின் புறத்தில் நகம் போன்ற இரண்டு கால்கள் உண்டு; அவை நடமாட்டத்திற்கு உதவா. தோலில் கண் ணுடி விரியனுக்குள்ள மாதிரி வட்டமான குறிகள் இருக்

கும். இப்பாம்பின் வயிற்றுச் செதில்கள் குறுகலாக விருக்கும்.




[B. N. H. S. Journal]

படம் 25. மலைப்பாம்பு ஒரு குரங்கைச் சுற்றிக் கொல்வது

[பல்லி போன்ற ஊர்வனப் பிராணிகளிலிருந்து பாம்புகள் பரிணாம முறையில் தோன்றினவென்பது விஞ்ஞானிகளின் கொள்கை; அதற்கு மலைப்பாம்பின் கால்கள் சான்றாகும் என்பர்.]


மலைப்பாம்பு இரையைத் தன் உடலால் சுற்றிக் கொண்டு அதனை நொறுக்கிக் கொன்று விழுங்கும். சில



படம் 26. மலைப்பாம்பு [Madras Museum]

சமயங்களில் இது தன் இரையைப் பிடிக்கும் வழி விந்தையானது. இது தன் வாலை மரக்கிளையில் கட்டிக்கொண்டு விழுது போல் தலைகீழாகத் தொங்கும். இதனை அறியாமல் ஏமாந்து மான், குரங்கு போன்ற விலங்கு அருகில் வருமானல் இது மின்னல் வேகத்தில் அதன் மீது பாய்ந்து கொன்று விடும். இது வேகமாக ஊர்ந்து செல்லும் பாம்பன்று. மலைப்பாம்பு நூறு முட்டைகள் வரையில் இடும். தாய்ப்பாம்பு முட்டைகளைச் சுற்றி வளைந்திருந்து பாதுகாக்கும்.

சாரைப்பாம்பு (Rat snake). இதனைப் பார்த்திராதவர் மிகச் சிலரேயாவார். இது மைதானங்களிலும் காடுகளிலும், தோட்டங்களிலும், புதர்களிலும் நீர்நிலைகளுக்கருகிலும் சாதாரணமாகக் காணப்படும். மலைப்பாம்பைப் போலல்லாமல் சாரைப்பாம்பு மிக வேகமாக ஊர்ந்து செல்லும்; இது சுமார் ஐந்து, ஆறு அடி நீளம் வளர்வது; இதன் மேல்பாகம் பசுமை கலந்த தவிட்டு நிறமாகவோ,



படம் 27. சாரைப்பாம்பு

சிறிது பொன்னிறமாகவோ இருக்கும்; அடிப் பாகம் மஞ்சள் கலந்த வெண்ணிறமாக விருக்கும். மேல் வாயிலும் கீழ் வாயிலும் ஓரங்களிலுள்ள ஷீல்டுகளில் கருங்கோடுகள் இருக்கும்.


நவளை, எலி போன்ற பிராணிகளைப் பின்தொடர்ந்து சாரைப்பாம்பு நம் வீடுகளுக்குள் வருவதும் உண்டு. இது மரங்களின்மேல் ஏறிப் பறவைகளின் குஞ்சுகளைத் தின்னும்; தண்ணீரிலும் வேகமாக நீந்தும்.

சாரைப்பாம்பும் நாகப்பாம்பும் இணைசேரும் என்பது தப்பெண்ணம் என்று முன்பே கூறியுள்ளோம். பசுவின் மடியிலிருந்து பாலை இப்பாம்பு உறிஞ்சிக் குடிக்கும் என்றும், இது ஒருவனைக் கடித்தால் கடியுண்டவனுக்குக் கண் குருடாகும் என்றும் சிலர் கருதுகிறார்கள். இவையும் பிழைகளேயாகும். இப் பாம்பு முட்டையிடும் இனத்தைச் சேர்ந்ததே; ஒரு தடவையில் பத்து, பதினைந்து முட்டைகளிடும்.

[Rattle snake என்னும் ஒரு இனக் குழிவைபர் அமெரிக்காவிலுள்ளது. அது விஷமுள்ளது. அதன் வாலின் நுனியிலுள்ள முள்ளெலும்புகள் அசைவதனால் அப்பாம்பு ஒரு சலசலப்பை உண்டுபண்ணும். அப் பாம்பை Rat snake என்று தவறுதலாக எண்ணக் கூடாது.]

லைகோடான் அல்லது ஓலைப்பாம்பு (Lycodon: wolf snake). இதற்கு ஓலைப்பாம்பு, சுருட்டைப்பாம்பு, வழலைப் பாம்பு, சுவர்ப்பாம்பு என்று வெவ்வேறு பெயர்கள் சொல்வதுண்டு. லைகோடான் என்பது விஞ்ஞானிகள் கூறும் ஆங்கிலப் பெயராகும். இது பார்வைக்குக் கட்டுவிரியன் போலுள்ள ஒரு சிறு பாம்பு. சுமார் ஒன்றரை அல்லது இரண்டு அடி நீளம் வளரும். மனித சஞ்சாரமுள்ள இடங்களிலும் வீடுகளிலும் இதனைச் சாதாரணமாகக் காணலாம். இது கருந்தவிட்டு நிறமுடையது. கட்டுவிரியனுக்குள்ளமாதிரி இதன் முதுகில் வெண்ணிறமான கட்டுக்கள் இருப்பதால் இதையும் கட்டுவிரியன் என்று தவருகக் கருதுவர். ஆனல் முதுகின் நடுவிலுள்ள செதில்கள் கட்டுவிரியனுக்குள்ளன போலப் பெரிதாக இரா. தவிர கட்டு

விரியனில் வெண்ணிறக் கட்டுக்கள் கழுத்திற்குச் சிறிது பின்னல் தொடங்கி வால் நுனி வரையில் இருக்கும்; இவை பின்னுக்குப் போகப் போகத் தெளிவாக விளங்




[Original photo]

படம் 28. ஓலைப்பாம்பு

கும். லைகோடானுக்குக் கட்டுக்கள் கழுத்திலேயே ஆரம் பித்து வாலின் முன்புறம் வரையில்தான் இருக்கும்; இக் கட்டுக்கள் முன்பாகத்தில் தெளிவாக இருக்கும். மேஜர் வால் என்பவர் தம் பரிசோதனையில் இப்பாம்பு கள் தம்மைக் கடித்திருப்பதாகவும் அதனல் கெடுதல் ஒன்றும் தமக்கு நேரவில்லை என்றும் கூறுகிருர்.

கட்டஜாவிரியன் (Dryocalamus: bridal snake). இப்பாம்பு, லைகோடானைப் போல் கட்டுக்கள் கூடியது.




படம் 29. கட்டஜா விரியன் [Original photo]

தேகம் மென்மையாகவும் தவிட்டு நிறமாகவும் இருக்கும். இது சுமார் ஒன்றரை அடி நீளம் வளரும். இது சாதாரண மாக எங்கும் காணப்படும் பாம்பன்று. இதனையும் கட்டு

விரியன் என்று சிலர் கருதுவதுண்டு. ஆனல் கட்டுவிரிய னுக்குள்ள பெரிய அறுகோணச் செதில்கள் இப்பாம் பின் முதுகில் இரா.

பவழப்பாம்பு (Callophis : coral snake). இதன் உடல் மெல்லியதாக இருக்கும். இது சுமார் ஓரடி நீளம் வள ரும். தலை கருமையாகவும் உடல் இளம் பசுமையுடன்




படம் 30. பவழப்பாம்பு [Fayrer]

கூடிய தவிட்டு நிறமாகவும் இருக்கும். உடலில் இருபக்கங் களிலும் கறுப்புப் புள்ளிகள் உண்டு. இதற்கு நாகப் பாம்புக்கு உள்ள மாதிரி முன்வாயில் நச்சுப் பற்கள் உண்டு. ஆனல் இதன் விஷம் மனிதனைப் பாதிப்பதில்லை.

பச்சோலைப்பாம்பு (Dryophis : whip snake). இது புதர் களிலும் மரங்களிலும் வாழும். ஐந்து அல்லது ஆறு அடி நீளம் வரை இது வளரும். உடல் நாணல்போல் மென்மை யாகவும், மேல்பாகம் பசுமையாகவும், அடிவெளுப்பாகவும் இருக்கும். அரணை, ஓணன், குருவி முதலிய பிராணிகள் இதற்கு இரையாகும். இப்பாம்பின் பசுமை நிறம் மரத் தின் பசுமையான இலை நிறத்தை ஒத்திருப்பதால், இலை நடுவில் இருக்கும்போது இது எளிதில் கண்ணுக்குப் புலப் படுவதில்லை. இதனல், இப்பாம்பு தன் இரையின் அருகில் அணுகுவது தெரியாமலே அதன்மீது பாய்ந்து விடும். இப்பாம்பின் வாய்நீரில் உள்ள விஷத்துக்கு இவ்வத்தியாயத்தில் கூறப்பட்ட பிற பாம்புகளின் விஷத்தைக் காட்டிலும் ஆற்றல் மிகுதி. ஆனல் அது மக்களைப் பாதிப்பதில்லை. இப்பாம்பு மக்கள்

விரலைக் கடிப்பின் கடிவாயில் வீக்கமும் எரிச்சலும் தவிர வேறு கெடுதல் உண்டாவது இல்லை என்று பரிசோதனை மூலம் கண்டறிந்துள்ளார்கள்.




படம் 31. பச்சோலைப்பாம்பு [F. B. India]

இப்பாம்பு கண்ணில் இலக்கு வைத்துக் குத்தும் என்ற நம்பிக்கையால் இதனைக் கண்குத்திப் பாம்பு என்று கூறுவதுண்டு; கண்ணைக் குத்தும் என்பது பிழையாகும். பச்சோலைப்பாம்பு ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குப் பறப்பதாகவும் சிலர் கூறுவார்கள்; இதுவும் உண்மையன்று. இப்பாம்பு குட்டிகள் ஈனும். ஒரு சமயத்தில் ஐந்து முதல் பன்னிரண்டு வரை குட்டிகள் பிறந்திருப்பதாகக் கண்டிருக்கிறார்கள்.


தண்ணீர்ப் பாம்புகள். சில பாம்பினங்கள் குளம், ஏரி போன்ற நீர் நிலைகளிலும், நீர் தங்கிய வயல், புலன்களிலும் ஈரம் பாய்ந்த வெட்டவெளிகளிலும், வாழ்கின்றன.

அவற்றின் செதில்களின் நடுவில் ஒரு வரம்பு இருக்கும். நாசித்துவாரங்கள் தலையின் மேல்பாகத்தில் இருக்கும்.



படம் 32. கல்யாணிக்குட்டி [F. B. India]

தண்ணீரில் நீந்தும் போது காற்று வாங்குவதற்கு இவை அநுகூலமாகும். நீர் மட்டத்திற்கு மேல் தலையை நீட்டிக்



படம் 33. நீர்ச்சாரை

கொண்டு தண்ணீரில் இப்பாம்புகள் நீந்துவதை யாவரும் கண்டிருக்கலாம். இவற்றுள் இரண்டு மூன்று இனங்கள்

உண்டு. அவற்றை நீர்க்கோலி, நீர்ச்சாரை (Helicops), கல்யாணிக்குட்டி (Tropidonotus stolatus) நிக்கட்டான் என்று பல பெயர்களால் குறிக்கிறார்கள். நம்முடைய பிராந்தியங்களுள் சாதாரணமாகக் காணப்படும் இரண்டு இனப்பாம்புகளைப் படத்திற் காண்க.

கொம்பேறுமூர்க்கன் (Dendrophis). இது பச்சோலைப் பாம்பைப் போல் மரத்தில் வாழும் பாம்பாகும். உலர்ந்த கிளைகளில் சாதாரணமாக வாழ்வதால் இது மங்கிய பழுப்பு நிறமாக இருக்கும். இதன் வேகம் வியக்கத்தக்கது. மரத்திற்கு மரம் தேகத்தை வில்போல் வளைத்துக்கொண்டு தாவுங் காரணமாக 'வில்லுனி' என்ற பெயரும் இதற்கு உண்டு. பல்லி, ஓணான், அரணை முதலியன இதன் இரையாகும். இதன் விஷமும் பச்சோலைப்பாம்பினது போல் வீக்கம், எரிச்சல் முதலான கோளாறுகளை உண்டாக்கும். இப்பாம்பு, தன்னாற் கடியுண்டவன் இறந்து மயானத்தில் எரிக்கப் படுகிறானென்று அறிந்து கொள்ள மரத்தின் மேலேறிப் பார்க்குமென்றும் ஏறிய மூர்க்கன் மரத்திலிருந்து இறங்கினால் கடிபட்டவனுக்கு விஷம் இறங்கி விடும் என்றும் பொதுவாக மக்கள் நம்பு கின்றனர். இந்நம்பிக்கையால் பாம்பு பார்க்கும்படி கட்டைகளைச் சுடுகாட்டிலிட்டுப் புகை யெழுப்புவது முண்டு. இக்கொள்கை விஞ்ஞானிகளால் ஏற்றுக் கொள்ளப்பட வில்லை.

4. பாம்பின் விஷமும் சிகிச்சை முறைகளும்

பாம்பின் விஷம்

பாம்பின் விஷம் மஞ்சள் நிறமுள்ள திரவ பதார்த்தம். அதில் மூன்று விதமான சத்துக்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று மூளையையும் நரம்புகளையும் பாதிக்கும்; மற்றொன்று இரத்தத்தின் அணுக்களையும்

(corpuscles) இரத்தத் தந்துகிகளையும் (capillaries) அரிக்கும்; பிறிதொன்று இரத்தத்தை உறையச் செய்யும். இம் மூன்றும் எல்லா இனப்பாம்பின் விஷத்திலும் அடங்கி யுள்ளன. ஆனால் ஒவ்வொரு இனப்பாம்பின் விஷத்திலும் ஒவ்வொரு வகைச் சத்து கூடியும் குறைந்தும் காணப்படும்; அவ்வளவிற் கேற்ப கொடுமையும் வேறுபடும்.

நாகப்பாம்பின் விஷத்தில் மூளை, நரம்புகளைப் பாதிக்கும் சத்து ஓங்கி நிற்கிறது. ஆதலால் இப்பாம்பால் கடியுண்டவனுக்கு மூளையும் நரம்புகளும் கெடுதல் அடையும்; அடையவே அவைகளால் இயங்கும் கை, கால்களும் சோர்வடையும். மேலும் மூச்சுறுப்புக்கள் பாதிக்கப் பட்டுச் சுவாசம் நின்று விடும். நாகப்பாம்பு கடித்த ஒருவன் தேகத்தினுள் விஷம் நன்றாகச் சென்றிருந்தால் அதன் கோளாறு ஒரு மணி நேரத்தில் தெரியும். தகுந்த வைத்தியம் செய்யாவிட்டால் ஐந்து அல்லது ஆறு மணிப் பொழுதில் மரணம் நேரிடும். கடற்பாம்பின் விஷமும் நாகப்பாம்பின் விஷத்தை ஒத்திருக்கும்; ஆனால் அது எண் மடங்கு கொடியது.

வைபர்களின் விஷத்தில் இரத்தத்தைப் பாதிக்கும் சத்து ஓங்கியிருக்கிறது. அது இரத்தத் தந்துகிகளை அரிப்பதனால் இரத்தம் அவற்றிற்கு வெளியே வந்து தோலுக்குக்கீழ்த் திட்டுதிட்டாக நிற்கும். கடியுண்டவனுடைய மூக்கு, வாய் முதலான உறுப்புக்கள் வழியாக இரத்தம் வெளியே வரும்.

சுருட்டை விரியன், கட்டுவிரியன் போன்ற பாம்புகள் கடித்தால் இரத்தக்குழல்களிலுள்ள இரத்தம் உறைந்து இரத்தவோட்டம் நின்று மரணம் நேரிடும். கட்டுவிரியன் விஷம் நாகப்பாம்பின் விஷத்தைவிட நான்கு மடங்கு ஆற்றலுடையது. சுருட்டை விரியன், கண்ணாடி விரியன் இவ்விரண்டின் விஷம் நாகப்பாம்பின் விஷத்தைக் காட்டிலும் ஆற்றல் குறைவுள்ளது.

கடிவாயிலுள்ள பற்களின் குறிகள்

கடிவாயிலுள்ள பற்களின் குறிகளிலிருந்து கடித்த பாம்பு விஷமுள்ளதா, விஷமற்றதா என்று சொல்ல முடியுமா ? இவ்விஷயத்தில் கருத்து வேற்றுமை யுண்டு ; கூற முடியும் என்பர் சிலர். பாம்புகடி விஷய மாகவே உழைத்து வந்த நிபுணர்கள் முடியாதென்று திட்டமாகக் கூறுகின்றனர். இதனுடன் நில்லாமல் அவ் வடையாளங்களிலிருந்து கடித்த பிராணி பாம்புதானு என்று கூடத் துணிவதற்கில்லை என்று சொல்லுவாரும் உளர்.

விஷம் தீண்டினுலும் விஷத்தை உண்டாலும் நேரிடுவ தென்ன ?

டாக்டர்கள் நோயைத் தடுக்கவோ, போக்கவோ ஊசிபோட்டு மருந்தை இரத்தத்தினுள்ளே செலுத்து வது போல், விஷப்பாம்பு ஒருவனைக் கடிக்கும்போது நச்சுச் சுரப்பிகளிலுள்ள விஷத்தை நச்சுப்பற்கள் மூலம் அவன் இரத்தத்தில் செலுத்துகிறது. அவ்விஷம் மூளை, இருதயம் போன்ற உறுப்புக்களுக்குச் சென்று கோளாறுகளை உண்டு பண்ணுகிறது.

வாய் வழியாக உட்கொள்ளும் விஷம் சாதாரண உணவுப் பொருள்கள் போல் செரிக்கப்படுவதாகப் பரி சோதனைகளால் அறிந்திருக்கிருர்கள். இதனுல் மக்கட்கு ஆபத்து நேரிடுவதில்லை. ஆனுல், வாயிலும் குடலிலும் வேக்காடு இருந்தால் இவ்விஷம் இரத்தத்துடன் கலக் கலாம். இப்படிக்கலந்த விஷமும் உறுப்புகளைப் பாதிக் கும். பாம்பு கடித்தகடிவாயிலிருந்து இரத்தத்தை உறிஞ்சி விட்டால் கடிபட்டவனுக்கு விஷம் ஏருது என்று சிலர் கூறுவர். எனினும் இவ்வாறு மேற்கூறியபடி, முன்னரே வாய்வேக்காடுடையவன் அக்கடிவாயை உறிஞ்சுவத ஞல் அபாயம் உண்டு. பாம்பு ஒருவனை நக்கினுலும் அதன் மூச்சு மேலே பட்டாலும் கெடுதல் ஒன்றும் நிகழ்வதில்லை.

பாம்பு கடிக்குச் சிகிச்சை முறை


பாம்பு கடித்தால் சிகிச்சை செய்பவர் கவனிக்க வேண்டிய விஷயங்கள் மூன்ருகும் ; (1) கடிவாயில் பட்ட விஷம் இரத்தத்தின் மூலமாகத் தேகத்தில் பரவுவதைத் தடுக்கவோ, குறைக்கவோ வேண்டும் ; (2) உட்சென்றிருக்கக் கூடிய விஷத்தை முறிக்க வேண்டும் ; (3) தேகத்தினுள்ளே சென்று விட்ட விஷத்தினல் உண்டாகும் கோளாற்றைப் போக்கவேண்டும். இவற்றை முறையே கவனிப்போம்.

1. விஷம் மேலே ஏருமலிருக்க (இரத்தத்தின் மூலம் தேகத்தில் பரவாமலிருக்க) கடிவாய்க்கு மேல் ஒரு துணியினலோ, கயிற்றினலோ இறுகக் கட்டவேண்டும். பாதத்திலாவது, கணுக்காலுக்கு மேலாவது பாம்பு கடித்திருந்தால் முழங்காலுக்கு மேல் துடையில் கட்டுக; புறங்கையிலாவது, முன் கையிலாவது கடித்திருந்தால் முழங்கைக்கு மேல் புஜத்தில் கட்டலாம். இவ்வாறு கட்டின பிறகு கடிவாயில் ஒரு கத்தியினல் மூன்று கீறுகள் காயம் செய்து கை விரலினல் அக் காயத்தை அழுத்தி இரத்தத்தை வெளியே போக்குக. பிறகு பொடாசியம் பர்மாங்கனேட்டு என்னும் மருந்தைத் தண்ணீரில் குழைத்துக் கடிவாயில் தேய்க்க. பொடாசியம் பர்மாங்கனேட்டையும், உலர்ந்த பாம்பின் விஷத்தையும் சம எடையாக எடுத்துக் கலந்தால் பாம்பின் விஷத்துக்கு வீரியம் இல்லாமல் போவதாகப் பரிசோதனை மூலம் கண்டறிந்திருக்கிருர்கள்.

2. ஏறின விஷத்தை முறிக்க ஆன்டி வெனின் (Antivenene) என்னும் மருந்தைத் தயாரித்திருக்கிருர்கள். கன்றுக்குட்டியிலிருந்து அம்மைப்பால் தயார் செய்வதுபோல், இம் மருந்து குதிரையிலிருந்து தயார் செய்யப்படுவதாகும்.

3. தேகத்தினுட் சென்ற விஷத்தினல் உண்டாகியிருக்கக் கூடிய தீங்குகளை நீக்க முதலுதவியாகச் சில

முறைகளைக் கையாள வேண்டும். உதாரணமாக, சோர்வு, கால் குளிர்ந்துபோதல் போன்ற குறிகள் இருந்தால், சூடான காபி, டீ போன்ற பானங்களைக் கொடுத்தோ, டர்பென்டைன் தடவியோ, தவிட்டை வெதுப்பி ஒத்தடம்



[Fitzsimons]

படம் 34. பரிசோதனைக்குப் பாம்பின் விஷத்தை எடுக்கும் விதம்: நச்சுச் சுரப்பி அழுத்தப்பட்டு நச்சுப்பல்லிலிருந்து விஷம் கண்ணாடிச் சிற்றகலில் விழுகிறது.

போட்டோ அப்பொழுதைப் பரிகாரம் செய்யலாம். பிராந்தி, சாராயம் போன்ற லாகிரிப் பொருள்களை அக்காலத்தில் கொடுக்கக்கூடாது.

எல்லாவற்றிற்கும் மேலாக முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. பாம்பு கடித்து மரணம் அடைந்ததாகக் கருதப்படும் பலர் உண்மையில் பயத்தி

ஞலேயே மடிந்திருக்கின்றனர். ஊேகோடான், தண் ணீர்ப் பாம்பு முதலான விஷமற்ற பாம்புகளும் அரணை போன்ற தீங்கற்ற பிராணியும் கடித்தபின் இறந்தவர் கள் உடலைப் பரிசோதித்து வைத்தியர்கள் பார்த்தபோது மேற் சொன்ன உண்மை விளங்கிற்று. ஆகையால் பாம்பால் கடியுண்டவனை முதலில் தைரியப் படுத்த வேண்டுவதவசியம்.

விஷப்பாம்பு ஒருவனைக் கடித்தாலும் அதன் விஷம் மரணம் உண்டு பண்ணத்தக்க அளவு தேகத்தில் சென் றிருக்க வேண்டு மென்பதில்லை. பாம்பு ஆத்திரத்துடன் கடிக்கும்போது நச்சுநாளம் நன்ருக நச்சுப்பற்களில் சேராமல் விஷம் சிதறிப்போவது முண்டு. ஆகையால் விஷப்பாம்பு கடித்தாலும் மரணம் கட்டாயம் நேரும் என்று சொல்வதற்கில்லை.

நம் நாட்டில் பலர் நசியம், மாத்திரை, கலிக்கம், மூலிகை, மந்திரம் இவைகள் மூலம் பாம்புக்கடிகளைக் குணப்படுத்துவதாகக் கேள்விப் படுகிறோம். விஞ்ஞான முறையில் பரிசோதிக்கப்படாதிருப்பதால் அவற்றைப் பற்றித் தீர்மானமாக ஒன்றும் சொல்வதற்கில்லை.

விஷமற்ற பாம்புகள் கடித்தாலும் பயத்தினலேயே பலர் மடிந்திருப்பதால், கடிபட்டவனிடம் காணும் கோளாறு விஷத்தினலா பயத்தினலா என்று தெரிந்து கொள்வது அவசியமாகும். இக்குறிகளை மேஜர் வால் என்பவர் ஓர் அட்டவணையாகக் கொடுத்திருக்கிருர். அவற்றுள் சிலவற்றை அடுத்த பக்கத்தில் காண்க.

விஷப்பாம்புகள் மிகச்சிலவே என்றும் பாம்பு கடித்து மடிந்தவர்களுள் பலர் பயத்தினலேயே மடிந்தவர் கள் என்றும் அறியப்படுவதால் விஷப்பாம்புகள் யாவை என்றும் அவற்றின் தன்மைகள் யாவையென்றும் அறிந்து கொள்வது அவசியமாகும். கடற்பாம்புக ளெல்லாம் விஷமுள்ளன; துடுப்புப்போன்ற வாலினல்

விஷத்தினுல் உண்டாகும் கோளாறு	பயத்தினுலுண்டாகும் கோளாறு
1. சோர்வு படிப்படியாக உண்டாகும்.	சோர்வு திடீரென்று உண்டாகும்.
2. தன்னறிவு இருந்து சிறிது தூரம் நடக்க முடியும்.	தன்னறிவு இழந்து நிற்க முடியாமல் போகும்.
3. முகம் படிப்படியாக நீலம் பாய்ந்ததுபோல் இருக்கும்.	முகம் திடீரென்று வெளுத்துவிடும்.
4. தேகம் வெப்பநிலை மாருது.	தேகம் குளிர்ந்து போம்.
5. நாடி தெளிவாக இருக்கும்.	நாடி தெளிவாக இராது.
6. மூச்சுவிடுவது கஷ்டமாக விருக்கும்.	சாதாரணமாக மூச்சு விடுவான்.

அவற்றைத் தெரிந்து கொள்ளலாம். குழிவைபர் மலைப் பிரதேசங்களில் தாம் வாழ்கின்றன. அவற்றைக் கண்களுக்கும் நாசித்துவாரங்களுக்கும் இடையேயுள்ள சிறு குழிவுகளால் அறியலாம். இவற்றைத் தவிர்த்தால் நாகப்பாம்பு, கண்ணுடி விரியன், சுருட்டை விரியன், கட்டுவிரியன் என்னும் பாம்புகளே விஷமுள்ளவை.


விஷப்பாம்புகளைக் கண்டறிந்து கொள்ளப் பின்வரும் அட்டவணையைக் காண்க.

1. வால் துடுப்புப் போல் தட்டையாக விருந்தால்........ **விஷப்பாம்பு (கடற்பாம்பு)**

2. வால் உருண்டு வயிற்றுச் செதில்கள் படம் 35, 3-ல் காட்டியபடி உடலின் மேல்பாகத்திலுள்ள செதில்களைப் போலும், 2-ல் காட்டியபடி குறுகலாகவும் இருந்தால் .... **விஷமற்றவை**

3. வால் உருண்டும் வயிற்றுச் செதில்கள் 1-ல் காட்டியபடி அகலமாகவும் இருந்தால்........

விஷமுள்ள நாகவோ, விஷமற்றதாகவோ இருக்கலாம்



1 2 3

படம் 35. பாம்பின் வயிற்றுச் செதில்களின் அமைப்பு

a. தலையில் செதில்கள் இருந்தால்......விஷமுள்ளன **(வைபர்கள்)**

i. கண்ணிற்கும் நாசித்துவாரத்திற்கும் இடையே இருகுழிகள் பெற்றிருந்தால்,...... குழிவைபர்

ii. குழிவு இல்லாவிட்டால்......... **கண்ணாடி விரியன், அல்லது சுருட்டை விரியன்**

[சுருட்டைவிரியனில் வாலின் அடிப்பாகத்தில் செதில்கள் ஒரே வரிசையாக இருக்கும்; கண்ணாடிவிரியனில் இருவரிசைகள் இருக்கும்.]

(*b*) தலையில் ஷீல்டுகள் இருந்து முதுகின் மத்தியில் செதில்கள் பெரிதாகவும் அறுகோணவடிவமுள்ளன வாகவும் இருப்பதுடன் வெண்ணிறமான கட்டுகள் முதுகில் இருந்தால்...... **கட்டு விரியன்**

(*c*) தலையில் ஷீல்டுகள் இருந்து முதுகின் மத்தியிலுள்ள செதில்கள் மற்றச் செதில்களைப் போலும் படமிருந்தாலும், கழுத்தின் கீழ் இரண்டு அல்லது மூன்று வயிற்றுச் செதில்கள் கருமையாக விருந்தால்......

நாகப்பாம்பு

[பாம்பைக் கண்டவுடன் கொல்லுவதே இயல்பாதலால் மேற்கூறிய தன்மைகளை எவ்வாறு கவனிக்கக் கூடும் என்று கருதலாம். பாம்பைக் கொல்லுவதில் தலையை நசுக்காமல் இருந்தால் இவற்றைச் சுலபமாக அறியக் கூடும்.]

5. பிற்சேர்க்கை

பாம்புகள் முதலிய விஷச் செந்துக்களைப்பற்றி சித்தராரூடம் என்னும் நூலில் கூறியுள்ள சில விஷயங்கள் வருமாறு.

நச்சுப் பிராணிகள்

புண்டரீகத் திலுறைவோன் படைப்பினில்
பொல்லாத விடசெந்து வெல்லாம் நனி
விண்டுரைக்க நீ கேளாய் [1]நல்லபாம்பு
[1]விரியன் [1]வழலைக் [1]கொம்பேறு மூக்கன்
[2]சாரை மூக்கன் [2]புடையன் [3]மண்டலி
[2]சவடி [2]மயக்கரா [4]மண்ணுளி [1]சாரை
வாளை வாட்டுஞ் செய்யான் இருதலை
மணியன் சிலந்தி [5]புலிமுகப்பூச்சி
தேட் புள்ளிவண்டு பூரான் பச்சோந்தி
செவ்வட்டை பேய் நரி நாய் செஞ்செயலி
வாட்பல்லிப்பூனை புலி [2]பிலவங்கம்
வனத்திற்றவளை அட்டை [2]வாசி முதலை
அரணை நண்டுத்தெறுக்கால் முதலியவை
யல்லாத செந்துவுமனேக முண்டு.

---

[1] இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

[2] இப்பிராணிகள் யாவை என்று கூறுவதற்கில்லை;

[3] மண்டலி என்று இருவிதமான பிராணிகளைக் கூறுகின்றனர்; ஒன்று, பூரான் வகுப்பைச் சேர்ந்தது: மற்றொன்று, சிலந்தி வகுப்பைச் சேர்ந்தது.

[4] இந்நூலில் கூறியுள்ள கூழைப்பாம்பாக இருக்கலாம். இது விஷமற்றது.

[5] ஒருவகை எட்டுக்காலி.

புள்ளிவண்டு, பச்சோந்தி, செவ்வட்டை, அட்டை, அரணை விஷமற்றன.

பாம்பின் நச்சுப்பற்கள்

கடுவமரும் நாலெயிற்றிற்கும் பெயர் சொல்வேன்
காளி, காளாஸ்திரி, யமன் யமதூதனும்
மேல்வா யலகுதனில் அரவுக்கு
விளக்கமாய் நாலு பல்லு முளைத்திருக்கும்
நாலு பற்குந் துளையிருக்கும் கடித்திடில்
நச்சுப்பற்றுளை வழியாய் நஞ்சு கழன்று
வந்து கடிவாயிலிறங்கித் தொண்ணூற்றெட்டு
மாத்திரையினின்றுடலில் மண்டியேறும்
காளி யென்னும் பல்லுத் தைத்தவாய் புள்ளடியாம்
கடிவாயில் பன்னீர்போல் வடிவாகும் நீர்
மீளாத காளாஸ்திரி தைத்தவாய்
விளங்கு முக்கோணம் செந்நீர் பொசியும்
கோதராய யமனென்னும் பல்தைத்தவாய்
கூர்முட்கீறு நகரும் செந்நீர் பொசியும்
தூதனென்ற பல்லுத்தைத்தாற் விற்போலாஞ்
சுவடு, கழுநீர்போல் வடிவாகும்.

விரியன் பாம்பின் வகுப்புகள்

விரியனிலாறு பேதம் கத்தரி
விரியன் பெருவிரியனி ரத்தவிரியன்
பரிவுசெய் குறுவிரியன் [1]புல்விரியன்
பன்னுஞ் சலவிரியன் என்னுமிவற்றுள்
[2]முரட்டுக் கத்தரிவிரியன் சூல்கொண்டு
முதுகு வெடித்துக் குஞ்சு பொரித்தால்
கரட்டோந்தி தேள் பூரான் நண்டுத்
தெறுக்காலுடன் சிலந்தி புலிமுகப்பூச்சி
செய்யானது பொறிவண்டு முதற்பல
சிவ செந்துக்கள் சென்மிக்குமே.

---

[1] புல்விரியன் என்பது சுருட்டைவிரியனாகும்.

[2] முரட்டுக் கத்தரிவிரியன் என்பது கண்ணாடி விரியன் (Russell's viper) என்று புலப்படுகிறது. இது சூல் கொண்டு குட்டி போடும் தன்மையுள்ளது. ஆனால் குட்டிகள் முதுகு வெடித்து வெளியில் வரா. குட்டிகள் வெளியே வருவதற் கென்றுள்ள துவாரத்தின் வழியாகவே வெளியே வரும். ஒவ்வொரு இனப் பிராணியும் தன் இனத்தையே ஈனும். அவரை போட்டால் துவரை முளைக்குமா ?

5630

பாம்பின் பிறப்பு

பாம்பை வேதியர், அரசர், வணிகர், உழவர் என்று நான்கு சாதிகளாகப் பகுத்துளர்.

சாதியிந்த நால்வகையில் ஆணும் பெண்ணும்
தழுவிப் புணர்ந்து கருப்பந் தரித்த பின்னர்
நீதியாய் முட்டையிட்டுப் பொரித்திடும்
நேர்மையைச் சொல்லுகிறேன் நீ கேளாய் ;
காற்றூறு மாடிமாதம் ஒன்ருெடொன்று
கலந்து வயிற்றிலே கருத்தரிக்கும் ;
தோற்றிய கார்த்திகையில் கருமுற்றிச்
சூலுளீந்தீனு மென்பரே லவ்வேழுநாள்
இருநூற்று நாற்பத்தெட்டு முட்டைக
ளிட்டிரு நூற்றிருபத் தெட்டோ ரேழுநாளில்
பருகிடும் ; நாலுமுட்டை அழிந்துபோம்
பதினறு முட்டை நல்ல பக்குவத்திலே
ஒருமிக்க இருபத்தேழாம் நாளினில்
உசிதமாகப் பொரிந்தூர்ந்து திரியும்
* நாலாறு காலு முண்டாம் தோன்றிய
நாளேழு நாளினில் நஞ்சுவேண்டி
மேலேறு மாதித்தனைப் பார்த்தாடுமே
விளங்கு மேல்வாய்ப் பல்லு நாலிலுமே
கொடும் விடம் வந்துதிக்கும் பற்சுறக்கும்
கூறலூற்றிடு மாருமலே.

நாகப்பாம்பின் வயது

இருதலை மணியன், செந்நாய், மயிலன்னம்
எருதின் குளம்பு மின்னலிடி கீரி
கருமயிர்க்கரடி பன்றி செம்போத்து
கருடன் முதலை யாந்தை காக்கை கூகை
செயலுள்ள மாரிவெள்ளம் மறுமுதற்
செப்பிய சத்துருவுக்குத் தப்பிப் பிழைத்தால்
வயதொரு நூற்றிருபது சாகாமல்

---

* பாம்பிற்கு எந்த நிலையிலும் கால்கள் இல்லை.

மண்மிசை வாழ்ந்திருக்கும் உண்மையிதுவே ;
மண்மீதில் நூற்றிருபது பருவமும்
வாழ்ந்த பிறகுடல் தேய்ந்துருகி
ஒண்மணி படஞ்சிறகாய்ப் பறக்கும்போதுயர்ந்த
சிகையின் மணியொன்று தோன்றும் ;
தோற்றிய வந்த நாகம் புவிவிட்டுத்
தொடரும்; வனத்தினும் விண்ணடர்வெற்பினும்
போற்றியே பணிகோடி சூழவே
புரவலன் போலிருந் தரசுசெய்யும் ;
மாணுகமென்று பேருறும் ; கருடற்கு
மாத்திரம் பயப்படும் ; நேர்த்தியாய்த்
தானுன்கு பல்லின் விஷமும் இருகண்ணில்
தரித்திடும் ; பார்த்தவுடனெரித்திடுமே
பாம்பின் ராசாளி யென்றும் புகலுவர் ;
பருவமவை யொருநூற்றிருபதறத்
தாம் பெற்றவாயுள் முழுதும் இருந்து பின்
சாலோக பதத்திற்கு மேலாமென்பார்.

பாம்புகளைப்பற்றிய நூல்கள்

மேலும் பாம்புகளைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புவோர்களுக்கு அடியிற்கண்ட நூல்கள் உபயோகமாகும் :

1. *K. G. Gharpurey*—The Snakes of India. (Bhatkal: Bombay.)

2. *Major Wall*. The poisonous Terrestrial Snakes of our British Indian Dominions and How to recognise them. [B. N. H. S. Society, Apollo Street, Bombay.]